**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

நாள்: 16.03.2022 புதன் கிழமை

OS.No.266/2018 PW3: சுரேஷ்

**குறுக்கு விசாரணை**

நான் விவசாய வேலை செய்கிறேன். கிரைய உடன்படிக்கைக்கு ஆவண எழுத்தர் சரவணன் என்பவருக்கு மாரியாயி, தங்கராஜு, பரமசிவம், நடராஜன் ஆகியோர் விவரம் சொன்னதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைய உடன்படிக்கையில் மேற்படி 4 நபர்களும் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1. கிரைய உடன்படிக்கையில் மேற்படி நபர்கள் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த கிரைய உடன்படிக்கையில் மேற்சொன்ன நபர்கள் ஏன் கையெழுத்து செய்யவில்லை என்று எனக்கு தெரியாது. மேற்சொன்ன நபர்கள் ஆவணத்தை தட்டச்சு செய்த இடத்தில் இல்லை என்பதால் தான் அவர்கள் அந்த ஆவணத்தில் கையெழுத்து செய்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாரியாயி, தங்கராஜ், பரமசிவம் மற்றும் நடராஜன் ஆகியோர் வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கையெழுத்து செய்யாமலேயே நான் அந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக வாய்மொழி ஒப்பந்தம் மட்டுமே ஏற்பட்டது என்று சொன்னாலும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஏற்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வாதி பாலசுப்பிரமணியன் நில அளவையர் என்று சொன்னால் அவர் பணி ஓய்வு பெற்ற திருச்சி மாநகராட்சி ஊழியர் ஆவார். அவர் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர். அவர் தான் என்னைஅழைத்து வந்தாரா என்று கேட்டால் இந்த வழக்கில் சாட்சியம் சொல்ல அழைத்ததன் பேரில் நான் வந்தேன். வாதி பாலசுப்பிரமணியன் பிரதிவாதிகளின் தகப்பனார் சங்கிலி முத்து என்பவருக்கு ரூபாய் 2 லட்சத்தை கடனாக கொடுத்திருந்தார் என்று சொன்னாலும் அந்த வட்டிக்காக நிலத்தை அனுபவித்து கொள்ளுமாறு வாதியிடம் விட்டிருந்தார் என்று சொன்னாலம் நான் சொல்வதுபோல் தாவா சொத்துக்காக கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அதுபோல் தாவா நிலத்தை வாதி குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.